www.agaram.lk



AL/2017/33/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

ගිණුම්කරණය I
கணக்கீடு I
Accounting I

**33 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

சுட்டெண் : ................................

**அறிவுறுத்தல்கள் :**

- ※ **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, **அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- ※ **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- ※ ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் உரித்தாகும்.
- ※ உங்கள் **சுட்டெண்ணை** மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் தெளிவாக எழுதுக.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| வினாத்தாள் I இற்காக | |
|---|---|
| வினா இல. | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

| | கையொப்பம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| 1ஆவது பரீட்சகர் | | |
| 2ஆவது பரீட்சகர் | | |
| மேலதிக/பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

**1.** நிறுவனமொன்றின் நிதிக் கணக்கீட்டின் பிரதான நோக்கம் யாது?
(1) தீர்மானம் எடுப்பதற்காக முகாமையாளர்களுக்குத் தகவல்களை வழங்குதல்
(2) வருமானத்தின் மீது வரிகளை விதிப்பதற்காக அரசாங்கத்திற்குத் தகவல்களை வழங்குதல்
(3) நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயமொன்றினை வெளிப்படுத்துவதற்காக கணக்காய்வாளர்களுக்குத் தகவல்களை வழங்குதல்
(4) நிதிக் கூற்றுக்கள் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கிச் செல்கின்றனவா என்பதனை அவதானிப்பதற்காகத் தகவல்களை வழங்குதல்
(5) நிறுவனத்தின் மீது அக்கறையுடைய வெளிவாரி அக்கறையுடையோர் தீர்மானங்களை எடுப்பதற்குத் தகவல்களை வழங்குதல் (......)

**2.** பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களில் எது வியாபாரமொன்றின் நிதிக் கூற்றுக்களில் ஊழியர்களின் தேர்ச்சிகளை இனங்காணத் **தேவையில்லை** என்பதற்கான அடிப்படையை வழங்குகிறது ?
(1) அலகுசார் (2) முன்னெச்சரிக்கை (3) வரலாற்றுக் கிரயம்
(4) பொருண்மை (5) பண அளவீடு (......)

**3.** பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களில் எது வியாபாரமொன்றின் நிதிக் கூற்றுக்களில் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் என இனங்காண்பதற்கான அடிப்படையை வழங்குகிறது ?
(1) அட்டுறு (2) முன்னெச்சரிக்கை (3) தொடர்ந்து இயங்குதல்
(4) இணைத்தல் (5) பொருண்மை (......)

**4.** நீகன் என்பவர் தனது வியாபாரத்தினால் பெறப்பட்ட கடனுக்கான மாதாந்த தவணைக் கொடுப்பனவான ரூ. 100 000 ஐ தனது சொந்தப் பணத்திலிருந்து செலுத்தியுள்ளார். தவணைக் கொடுப்பனவுக்குள் உள்ளடங்கியுள்ள வட்டி ரூ. 25 000 ஆகும். பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாடுகளில் எது இக்கொடுக்கல்வாங்கல்களின் **தேறிய விளைவினைக்** காட்டுகின்றது ? (நிதிக் கூற்றுக்கள் மாதாந்தம் தயாரிக்கப்படுகின்றன எனக் கருதுக.)

| | சொத்துக்கள் (ரூ.) | = | பொறுப்புக்கள் (ரூ.) | + | உரிமையாண்மை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| (1) | 0 | | –75 000 | | +75 000 |
| (2) | 0 | | –100 000 | | +100 000 |
| (3) | +75 000 | | 0 | | +75 000 |
| (4) | –100 000 | | –100 000 | | 0 |
| (5) | –100 000 | | –75 000 | | –25 000 |

(......)

● **5, 6, 7 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

குமரன் என்பவர் ரூ. 100 000 பட்டியல் விலை கொண்ட பொருட்களை 10% வியாபாரக் கழிவினை அனுமதித்ததன் பின்னர் அழகன் என்பவருக்கு 10.03.2017 இல் கடனுக்கு விற்பனை செய்துள்ளார். இப்பொருட்களின் கிரயமானது ரூ. 60 000 ஆக இருந்தது. ரூ. 30 000 விற்பனைப் பெறுமதியுடைய பொருட்கள் (கிரயம் ரூ. 20 000) ஆனவை 15.03.2017 இல் அழகனால் திருப்பி அனுப்பப்பட்டன. அழகன் தான் செலுத்த வேண்டிய மீதியினை 31.03.2017 இல் 5% காசுக் கழிவைப் பெற்ற பின்னர் கொடுத்துத் தீர்த்துள்ளார்.

**5.** குமரன் வியாபாரத்தில் இக்கொடுக்கல்வாங்கல்களைப் பதிவதற்குப் பயன்படுத்திய மூல ஆவணங்களின் ஒழுங்கு வரிசை:
(1) விலைப்பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு
(2) விலைப்பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு
(3) விலைப்பட்டியல், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு, பற்றுச்சீட்டு
(4) விலைப்பட்டியல், வரவுத்தாள், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு
(5) விலைப்பட்டியல், செலவுத்தாள், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு (......)

[பக். 2 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**6.** மேற்படி கொடுக்கல்வாங்கல்கள் காரணமாக **குமரன்** வியாபாரத்தின் 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான தேறிய இலாபத்தில் ஏற்பட்ட **தேறிய அதிகரிப்பு:**

(1) ரூ. 6 500 (2) ரூ. 7 000 (3) ரூ. 17 000 (4) ரூ. 20 000 (5) ரூ. 26 500 (……)

**7.** **அழகன்** வியாபாரத்தில் இக்கொடுக்கல்வாங்கல்களைப் பதிவதற்குப் பயன்படுத்திய மூலப் பதிவேடுகளின் ஒழுங்கு வரிசை:

(1) கொள்வனவு நாளேடு, கொள்வனவுத் திரும்பல் நாளேடு, காசுக் கொடுப்பனவுகள் நாளேடு
(2) கொள்வனவு நாளேடு, பொது நாளேடு, காசுக் கொடுப்பனவுகள் நாளேடு
(3) கொள்வனவு நாளேடு, கொள்வனவு நாளேடு, காசுக் கொடுப்பனவுகள் நாளேடு
(4) கொள்வனவு நாளேடு, கொள்வனவுத் திரும்பல் நாளேடு, பொது நாளேடு
(5) கொள்வனவு நாளேடு, பொது நாளேடு, பொது நாளேடு (……)

**8.** வியாபாரமொன்றின் புத்தகங்களிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | **31.03.2017 இல் (ரூ.)** | **31.03.2016 இல் (ரூ.)** |
|---|---|---|
| வியாபார வருமதிகள் | 1 200 000 | 1 000 000 |
| ஐயக்கடன்களுக்கான ஒதுக்கீடு | 120 000 | 100 000 |

மேலும், 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்தில் அறவிடமுடியாக் கடன்களாக ரூ. 60 000 பதிவழிக்கப்பட்டுள்ளதுடன் அவை அறிவிடமுடியாக்கடன்கள் கணக்கில் பதியப்பட்டுள்ளன.

பின்வருவனவற்றுள் **சரியானது** எது?

| | **31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன் செலவு (ரூ.'000)** | **31.03.2017 இல் வியாபார வருமதிகளின் கொண்டுசெல் மீதி (ரூ.'000)** |
|---|---|---|
| (1) | 60 | 1 080 |
| (2) | 80 | 1 020 |
| (3) | 80 | 1 080 |
| (4) | 180 | 1 020 |
| (5) | 180 | 1 080 |

(……)

● **9 ஆம், 10 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

வியாபாரமொன்று தனது எல்லாக் காசுக் கொடுக்கல்வாங்கல்களையும் வங்கி நடைமுறைக் கணக்கொன்றினூடாக மேற்கொள்கின்றது.

2017 மார்ச் மாதத்துக்கான கணக்குப் புத்தகங்களின்படி காசுக் கொடுக்கல்வாங்கல்களின் சுருக்கம்:

| **விபரம்** | **ரூ.'000** |
|---|---|
| 01.03.2017 இல் காசு மீதி | 100 |
| 31.03.2017 இல் காசுப் பெறுவனவுகள் நாளேட்டின் மொத்தத் தொகை | 1 200 |
| 31.03.2017 இல் காசுக் கொடுப்பனவுகள் நாளேட்டின் மொத்தத் தொகை | 900 |

04.04.2017 இல் பெறப்பட்ட 2017 மார்ச் மாதத்திற்கான வங்கிக்கூற்றின் சுருக்கம்:

| **விபரம்** | **ரூ.'000** |
|---|---|
| 01.03.2017 இல் மீதி | 100 |
| வசூலிக்கப்பட்ட காசோலைகள் | 1 000 |
| செலுத்தப்பட்ட காசோலைகள் | 750 |
| நேரடியாக செலவு வைக்கப்பட்ட நிலையான வைப்பு வட்டி | 200 |
| நிலையியற் கட்டளைகளுக்கான கொடுப்பனவுகள் | 50 |

நிலையான வைப்பு வட்டி மற்றும் நிலையியற் கட்டளைக் கொடுப்பனவுகளானவை வங்கிக்கூற்றினைப் பெற்றதன் பின்னரே புத்தகங்களில் பதியப்படுகின்றன.

01.03.2017 இல் வசூலிக்கப்படாத அல்லது சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் எதுவும் காணப்படவில்லை.

**9.** இவ்வியாபாரத்தின் 31.03.2017 இல் காசுக் கணக்கின் சீராக்கிய மீதி யாது ?

(1) ரூ. 300 000 (2) ரூ. 350 000 (3) ரூ. 400 000 (4) ரூ. 500 000 (5) ரூ. 550 000 (……)

**10.** இவ்வியாபாரத்தின் 2017 மார்ச் மாதத்துக்கான காசுக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எவை **சரியானவை?**

A - 2017 மார்ச் மாதத்துக்கான காசுப் பெறுவனவுகளின் மொத்தம் ரூ. 1 400 000 ஆகும்.
B - 2017 மார்ச் மாதத்துக்கான காசுக் கொடுப்பனவுகளின் மொத்தம் ரூ. 950 000 ஆகும்.
C - 31.03.2017 இல் வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ. 200 000 ஆகும்.
D - 31.03.2017 இல் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூ. 150 000 ஆகும்.

(1) A, B மாத்திரம் (2) A, C மாத்திரம் (3) B, D மாத்திரம்
(4) C, D மாத்திரம் (5) A, B, C, D ஆகியன எல்லாம் (……)

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



13505

11. கணக்கீட்டுப் பதிவுகளை முறையாகப் பராமரிக்காத நிறுவனமொன்றின் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| விபரம் | 31.03.2017 இல் (ரூ.'000) | 31.03.2016 இல் (ரூ.'000) |
|---|---|---|
| மூலதனம் | 650 | 500 |
| நிறுத்திவைத்த வருவாய்கள் | 325 | 250 |

உரிமையாளர் வருடாந்தம் தனிப்பட்ட தேவைக்காக வியாபாரத்திலிருந்து ரூ. 50 000 இனைப் பற்றுகிறார். இத்தொகையானது வியாபாரத்தினால் பராமரிக்கப்படும் ஒரேயொரு ஒதுக்கமான நிறுத்திவைத்த வருவாய்களில் வரவு வைக்கப்படுகின்றது. 31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் மற்றும் 31.03.2017 இலுள்ள தேறிய சொத்துக்கள் எவை ?

| | வருடத்துக்கான இலாபம் (ரூ.'000) | தேறிய சொத்துக்கள் (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 25 | 925 |
| (2) | 75 | 975 |
| (3) | 75 | 875 |
| (4) | 125 | 875 |
| (5) | 125 | 975 |

(......)

12. பாடசாலை அபிவிருத்திச் சங்கமொன்றின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பின்வருமாறு:

| விபரம் | 31.03.2017 இல் (ரூ.'000) | 31.03.2016 இல் (ரூ.'000) |
|---|---|---|
| காரியாலய உபகரணம் (கொண்டுசெல் மீதி) | 750 | 800 |
| நிலுவையிலுள்ள சந்தா | 10 | 20 |
| வங்கியிலுள்ள காசு | 80 | 80 |
| நீண்டகால வங்கிக் கடன் | 600 | 800 |
| முற்பணமாகப் பெறப்பட்ட சந்தா | 50 | 40 |

31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான மிகை அல்லது பற்றாக்குறை எவ்வளவு? (தேறிய சொத்துக்கள் அடிப்படையைப் பயன்படுத்துக.)

(1) ரூ. 130 000 (2) ரூ. 170 000 (3) (ரூ. 40 000) (4) (ரூ. 170 000) (5) (ரூ. 130 000) (......)

● **13, 14 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

அகிலன், முகிலன் ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 2:1 எனும் விகிதத்தில் பகிர்ந்து பங்குடைமையொன்றை நடத்தினர். அதில் விமலன் என்பவர் 01.04.2016 இல் பங்காளராக அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் ரூ. 500 000 ஐ மூலதனமாக முதலிட்டுள்ளார். இத்திகதியில் மதிப்பீடு செய்யப்பட்ட நன்மதிப்பானது பங்காளர் மூலதனக் கணக்குகளின் ஊடாக சீராக்கப்பட்டுள்ளது. நன்மதிப்புக் கணக்கானது புத்தகங்களில் பராமரிக்கப்படுவதில்லை. அகிலன், முகிலன், விமலன் ஆகியோரின் பங்குடைமை ஒப்பந்தத்தின் விதிமுறைகள் பின்வருமாறு:

- இலாப நட்டமானது அகிலன், முகிலன், விமலன் ஆகியோருக்கிடையே முறையே 3:2:1 என்ற விகிதத்தில் பகிரப்படும்.
- முகிலன் ரூ. 360 000 வருடாந்த சம்பளத்துக்கு உரித்துடையவர்.

பின்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன.

| | மூலதனக் கணக்குகள்(ரூ.'000) செலவு மீதி | | நடைமுறைக் கணக்குகள் (ரூ.'000) செலவு மீதி | |
|---|---|---|---|---|
| | 31.03.2017 இல் | 31.03.2016 இல் | 31.03.2017 இல் | 31.03.2016 இல் |
| அகிலன் | 2 200 | 2 000 | 650 | 500 |
| முகிலன் | 1 000 | 1 000 | 700 | 300 |
| விமலன் | 300 | – | 50 | – |

அகிலன், முகிலன் ஆகியோர் இவ்வருடத்தில் மேலதிக மூலதனம் எதனையும் இடவில்லை. 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்காளர் பற்றுக்கள்: அகிலன் ரூ. 210 000, முகிலன் ரூ. 200 000, விமலன் ரூ. 70 000. இவை நடைமுறைக் கணக்கினூடாகச் சீராக்கம் செய்யப்பட்டுள்ளன.

13. 01.04.2016 இல் மதிப்பீடு செய்யப்பட்ட நன்மதிப்பு மற்றும் 31.03.2017 இலுள்ளவாறான பங்குடைமையின் உரிமையாண்மை:

| | நன்மதிப்பு (ரூ.'000) | உரிமையாண்மை (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 200 | 3 500 |
| (2) | 200 | 4 900 |
| (3) | 1 000 | 2 100 |
| (4) | 1 200 | 3 500 |
| (5) | 1 200 | 4 900 |

(......)

14. 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்குடைமையின் இலாபம் மற்றும் முகிலனுக்குப் பகிரப்பட்ட இலாபத்தின் மொத்தம்:

| | வருடத்துக்கான இலாபம் (ரூ.'000) | முகிலனுக்குப் பகிரப்பட்ட இலாபத்தின் மொத்தம் (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 600 | 240 |
| (2) | 720 | 240 |
| (3) | 720 | 600 |
| (4) | 1 080 | 240 |
| (5) | 1 080 | 600 |

(......)

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**15.** LKAS 16 (ஆதனம், பொறி மற்றும் உபகரணம்) இன் கீழ் இனங்காணப்படும் சொத்தொன்று தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எது **சரியானதாகும்?**

(1) பொருள் உற்பத்திக்கு அல்லது சேவை வழங்கலுக்குப் பாவிப்பதற்காக வைத்திருக்கப்படும் உருவச் சொத்து அல்லது அருவச் சொத்து
(2) ஒரு வருடத்துக்கு மேலான காலத்திற்குப் பயன்படுத்த எதிர்பார்க்கப்படும் சொத்து
(3) சொத்து இனங்காணலின்போது கிரய மாதிரி (Cost model) அல்லது மீள் மதிப்பு மாதிரி (Revaluation model) அடிப்படையில் அளவிடப்படும் சொத்து
(4) சொத்து இனங்காணலைத் தொடர்ந்து ஏற்படும் எல்லாச் செலவுகளும் எப்பொழுதும் மூலதனமாக்கப்படும்.
(5) சொத்தொன்றாக இதனை இனங்காண்பதற்கு சட்டரீதியான உடைமை அவசியமான நிபந்தனையாகும். (……)

**16.** பின்வரும் தகவல்கள் வியாபாரமொன்றினால் 31.03.2017 இல் பெற்றுக்கொள்ளப்பட்ட இயந்திரமொன்றுடன் தொடர்பானவையாகும். இவ்வியாபாரமானது பெறுமதிசேர் வரிக்காகப் (VAT) பதிவுசெய்யப்படுவதில்லை.

| விபரம் | ரூ. |
|---|---|
| 15% VAT உட்பட செலுத்தப்பட்ட விலை | 230 000 |
| விநியோகத்தரின் கம்பனியிலிருந்து வியாபாரத்துக்குக் கொண்டுவருவதற்கான போக்குவரத்துக் கிரயம் | 15 000 |
| நிறுவுதல் மற்றும் ஒன்றிணைத்தற் கிரயம் | 30 000 |
| பழைய இயந்திரத்தைக் கழற்றி அகற்றுவதற்கான கிரயம் | 2 000 |
| இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அதனைப் பரீட்சிப்பதற்கான கிரயம் | 8 000 |
| இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்கு ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான கிரயம் | 12 000 |

LKAS 16 (ஆதனம், பொறி மற்றும் உபகரணம்) இன்படி இனங்காணலின்போது இயந்திரத்தின் கிரயம் யாது ?

(1) ரூ. 255 000 (2) ரூ. 267 000 (3) ரூ. 283 000 (4) ரூ. 285 000 (5) ரூ. 297 000 (……)

**17.** பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றின் 2017 மார்ச் மாதத்துக்கான இருப்பு உருப்படியொன்றுடன் தொடர்புடையவையாகும்.

| திகதி | விபரம் | தொகை (அலகு) | அலகுக் கிரயம் (ரூ.) |
|---|---|---|---|
| 01.03.2017 | மீதி | 100 | 200 |
| 20.03.2017 | கொள்வனவுகள் | 400 | 400 |
| 27.03.2017 | விற்பனைகள் | 200 | ? |

கம்பனியானது தற்போது இருப்பு வழங்கலை விலையிடுவதற்கு முதல்-உள்-முதல்-வெளி முறையினைப் பயன்படுத்துகிறது. எனினும் இக்கம்பனியானது எதிர்காலத்தில் நிறையிட்ட சராசரி முறையினைப் பயன்படுத்துவதற்கு விரும்புகிறது.

இந்த ஒவ்வொரு முறையின் கீழும் 31.03.2017 இலுள்ளவாறான இருப்பின் கிரயம் எவ்வளவு ?

| | முதல்-உள்-முதல்-வெளி (ரூ.'000) | நிறையிட்ட சராசரி (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 100 | 90 |
| (2) | 100 | 108 |
| (3) | 120 | 90 |
| (4) | 120 | 108 |
| (5) | 120 | 180 |

(……)

**18.** 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான நினுதன் PLC இன் வருமானக் கூற்றின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூ.'000 |
|---|---|
| வருமானம் | 8 000 |
| விற்பனைக் கிரயம் | 2 000 |
| செயற்பாட்டுச் செலவுகள் (பெறுமானத்தேய்வு ரூ. 1 000 000 உட்பட) | 3 000 |

இக்கம்பனியின் நிதி நிலைமைக் கூற்றிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | 31.03.2017 இல் (ரூ.'000) | 31.03.2016 இல் (ரூ.'000) |
|---|---|---|
| வியாபாரக் கொடுக்குமதிகள் | 400 | 200 |
| இருப்புக்கள் | 900 | 600 |

கம்பனியானது பொருட்களைக் காசு அடிப்படையில் மட்டும் விற்பனை செய்வதுடன் இக்கம்பனியானது வரி விடுதலைக் காலத்துக்குள் இயங்குகின்றது.

31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசுப் பாய்ச்சல் யாது?

(1) ரூ. 2 900 000 (2) ரூ. 3 000 000 (3) ரூ. 3 900 000 (4) ரூ. 4 000 000 (5) ரூ. 4 100 000 (……)

**19.** LKAS 37 (ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்) இற்கு அமைய ஏற்பாடு ஒன்றை இனங்காண்பதில் திருப்திப்படுத்தப்பட வேண்டிய நிபந்தனை/நிபந்தனைகள் எது/எவை ?

A - கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக எழும் சட்டரீதியான அல்லது உறுதியான கடப்பாடு ஒன்றினை நிறுவனமானது நிகழ்காலத்தில் கொண்டிருத்தல்

B - கடப்பாட்டினைத் தீர்ப்பதற்குப் பொருளாதார நன்மைகளைக் கொண்டு காணப்படும் வளங்களின் வெளிப்பாய்ச்சலுக்கான சாத்தியத் தன்மை காணப்படல்

C - கடப்பாட்டிற்கான தொகை தொடர்பில் நம்பத்தகுந்த மதிப்பீட்டினை மேற்கொள்ள முடிதல்

(1) A மாத்திரம் (2) C மாத்திரம் (3) A, B மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகியன எல்லாம் (……)

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



13505

**20.** அமிலன் PLC இன் 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிக் கூற்றுக்களானவை இயக்குனர்களினால் 30.06.2017 இல் அதிகாரமளிக்கப்பட்டுள்ளன. 31.03.2017 தொடக்கம் 30.06.2017 வரையான காலப்பகுதியில் கம்பனியில் பின்வரும் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

A - 01.05.2017 இலிருந்து கம்பனியின் முதலீட்டின் சந்தைப் பெறுமதியானது தொடர்ச்சியாகக் குறைந்து செல்கிறது.
B - 01.03.2017 இல் கடனுக்குப் பொருட்களை வாங்கிய கடன்பட்டோர் ஒருவர் 19.05.2017 இல் நீதிமன்றத்தினால் முறிவடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார்.
C - 30.05.2017 இல் ஏற்பட்ட தீ விபத்தினால் 31.03.2017 இலிருந்து காணப்பட்ட இருப்புக்கள் அழிவடைந்துள்ளன.
D - கம்பனிக்குச் சொந்தமான 31.03.2017 இல் காணப்பட்ட நிலமொன்று வீதியொன்றை நிர்மாணிப்பதற்காகப் பெற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கும் கடிதமொன்று 20.06.2017 இல் அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்டது.

மேற்கூறிய நிகழ்வுகளில் LKAS 10 (அறிக்கையிடற் காலத்துக்குப் பிந்திய நிகழ்வுகள்) இன்படி கம்பனியின் 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யத் **தேவையற்ற நிகழ்வுகளாகக்** கருதப்படும் நிகழ்வுகள் எவை?

(1) A, B மாத்திரம் (2) A, D மாத்திரம் (3) A, C, D மாத்திரம்
(4) B, C, D மாத்திரம் (5) A, B, C, D ஆகியன எல்லாம் (......)

**21.** பின்வரும் தகவல்கள் இலங்கை PLC உடன் தொடர்பானவையாகும்.

| **விபரம்** | **31.03.2017 இல் (ரூ.'000)** | **31.03.2016 இல் (ரூ.'000)** |
|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | 5 000 | 4 600 |
| நிறுத்திவைத்த வருவாய்கள் | 1 500 | 900 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 1 000 | – |
| **மொத்தம்** | **7 500** | **5 500** |

31.03.2017 இல் முடிவடைந்த வருடத்தில் ரூ. 200 000 இடைக்காலப் பங்கிலாபம் செலுத்தப்பட்டுள்ளதுடன் 15.04.2017 இல் இறுதிப் பங்கிலாபமாக ரூ. 300 000 பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 31.03.2017 இல் முதல்முறையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டன.

31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் மற்றும் மொத்த முற்றுமடங்கிய வருமானம் ஆகியன எவை?

| | **இலாபம் (ரூ.'000)** | **மொத்த முற்றுமடங்கிய வருமானம் (ரூ.'000)** |
|---|---|---|
| (1) | 600 | 1 000 |
| (2) | 600 | 1 600 |
| (3) | 800 | 1 000 |
| (4) | 800 | 1 800 |
| (5) | 1 100 | 2 100 |

(......)

**22.** பின்வரும் தகவல்கள் ஓர் உற்பத்திக் கம்பனியுடன் தொடர்புடையவையாகும்.

| **31.03.2017 இல் :** | | **31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான :** | |
|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 2:1 | விற்பனைகள் | ரூ. 600 000 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | ரூ. 300 000 | மொத்த இலாப எல்லை | 25% |
| இருப்புக்கள் | ரூ. 120 000 | | |

01.04.2016 இல் இருப்புக்கள் ரூ. 180 000 ஆக இருந்தது.
கம்பனியின் விரைவு விகிதம் மற்றும் சரக்குப் புரள்வு விகிதம் என்பன எவை?

| | **விரைவு விகிதம் (தடவைகள்)** | **சரக்குப் புரள்வு விகிதம் (தடவைகள்)** |
|---|---|---|
| (1) | 0.4 | 3.75 |
| (2) | 0.625 | 3 |
| (3) | 0.625 | 4 |
| (4) | 1.6 | 3 |
| (5) | 1.6 | 4 |

(......)

**23.** சில்லறை வியாபாரமொன்றின் 31.03.2017 இல் நடைமுறை விகிதம் 2:1 ஆக இருந்தது. ஏனைய காரணிகள் மாறாமல் இருக்கும்போது பின்வரும் கொடுக்கல்வாங்கல்களில் எது இவ்விகிதத்தில் **குறைவினை** ஏற்படுத்தும்?

(1) பொருட்களின் விற்பனையொன்றிற்காக முற்பணம் ஒன்றைப் பெறல்
(2) இலாப எல்லையுடன் பொருட்களைக் கடனுக்கு விற்றல்
(3) ஏற்கனவே கடனுக்குக் கொள்வனவு செய்த பொருட்களைத் திருப்பியனுப்புதல்
(4) மோட்டார் வாகனமொன்றைக் காசுக்கு விற்றல்
(5) வங்கியிலிருந்து நீண்டகாலக் கடனொன்றைப் பெற்றுக்கொள்ளல் (......)

**24.** பின்வருவனவற்றுள் எவை நிறுவனமொன்றின் முகாமைக் கணக்கீட்டுத் தொழிற்பாட்டில் நிறைவேற்றப்படும் பணிகளாகும்?

A - வருடாந்த பாதீட்டினைத் தயாரித்தல்
B - தீர்மானம் எடுத்தலுக்காக நடவடிக்கையொன்றின் கிரயங்களை நிலையான மற்றும் மாறும் கிரயங்கள் எனப் பகுப்பாய்வு செய்தல்
C - பிரசுரிப்பதற்காகக் காசுப் பாய்ச்சற் கூற்றினைத் தயாரித்தல்
D - செயற்றிட்டமொன்றை மதிப்பிடுவதற்குக் காசுப் பாய்ச்சல்களை மதிப்பீடு செய்தல்

(1) A, C மாத்திரம் (2) B, D மாத்திரம் (3) A, B, D மாத்திரம்
(4) A, C, D மாத்திரம் (5) A, B, C, D ஆகியன எல்லாம் (......)

[பக். 6 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**25.** கிரயம் - தொகை - இலாபம் (CVP) பகுப்பாய்விற்குப் பின்வரும் கிரய வகைப்படுத்தலில் எது **மிகவும்** பொருத்தமானது?
(1) நேர்க் கிரயம் மற்றும் நேரில் கிரயம்
(2) தொடர்பற்ற கிரயம் மற்றும் சந்தர்ப்பக் கிரயம்
(3) தொடர்புடைய கிரயம் மற்றும் தொடர்பற்ற கிரயம்
(4) தொடர்புடைய கிரயம் மற்றும் ஆழ்ந்த கிரயம்
(5) மாறும் கிரயம் மற்றும் நிலையான கிரயம் (……)

**26.** பின்வரும் பாதிடப்பட்ட தகவல்களானவை தனிப்பொருளொன்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்றின் இயந்திர, முடிவுறுத்தற் பிரிவுகளுடன் தொடர்பானவையாகும்.

| | இயந்திரப் பிரிவு | முடிவுறுத்தற் பிரிவு |
|---|---|---|
| அலகொன்றை உற்பத்தி செய்வதற்குச் செலவழித்த நேரம் | 6 இயந்திர மணித்தியாலங்கள் | 8 ஊழிய மணித்தியாலங்கள் |
| மேந்தலை உறிஞ்சல் வீதம் | இயந்திர மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ. 30 | ஊழிய மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ. 40 |

அலகொன்றிற்கான பாதிடப்பட்ட உற்பத்திக் கிரயம் ரூ. 800 ஆகும். இப்பொருளின் அலகொன்றிற்கான பாதிடப்பட்ட மூலக் கிரயம் யாது?
(1) ரூ. 300 (2) ரூ. 480 (3) ரூ. 500 (4) ரூ. 620 (5) ரூ. 730 (……)

**27.** ஆடை உற்பத்தி நிறுவனமொன்றின் இயந்திரத்தை இயக்குபவர்களுக்கான நேர்கூலிகளாகக் கருதப்படக்கூடிய உருப்படிகள் பின்வருவனவற்றுள் யாவை?

A - வழமையாக வேலைசெய்யும் நேரத்துக்கான அடிப்படைச் சம்பளம்
B - உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலான ஊக்குவிப்புக் கொடுப்பனவு
C - விசேட கட்டளையொன்றிற்கான மேலதிக நேரத்திற்குரிய கூடுதல் கொடுப்பனவு
D - வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதற்காக வழங்கப்படும் மருத்துவக் கொடுப்பனவு

(1) A, B மாத்திரம் (2) A, C மாத்திரம் (3) A, D மாத்திரம்
(4) A, B, C மாத்திரம் (5) B, C, D மாத்திரம் (……)

**28.** உற்பத்திக் கம்பனியொன்று மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு சிக்கனக் கட்டளைத் தொகையினை மறுகட்டளைத் தொகையாகப் பயன்படுத்துகிறது. பின்வரும் தகவல்கள் மூலப்பொருள் உருப்படி ஒன்றுடன் தொடர்பானவையாகும்.

| | |
|---|---|
| கட்டளையிடற் கிரயம் | கட்டளையொன்றிற்கு ரூ. 750 |
| இருப்பு வைத்திருத்தற் கிரயம் | வருடாந்தம் அலகொன்றுக்கு ரூ. 10 |
| மாதாந்த கேள்வி | 5 000 அலகுகள் |

மூலப்பொருளின் சிக்கனக் கட்டளைத் தொகை மற்றும் வருடாந்த கட்டளையிடற் கிரயம் என்பன பின்வருவனவற்றுள் யாவை?

| | சிக்கனக் கட்டளைத் தொகை (அலகுகள்) | வருடாந்தக் கட்டளையிடற் கிரயம் (ரூ.) |
|---|---|---|
| (1) | 1 000 | 45 000 |
| (2) | 2 000 | 22 500 |
| (3) | 3 000 | 15 000 |
| (4) | 4 000 | 11 250 |
| (5) | 5 000 | 9 000 |

(……)

**29.** பின்வரும் தகவல்கள் கம்பனி ஒன்றினால் உற்பத்தி செய்யப்படும் பொருளொன்றுடன் தொடர்பானவை.
அலகொன்றுக்கான மாறும் கிரயம் ரூ. 150 பங்களிப்பு - விற்பனை விகிதம் 40%
கம்பனியானது அலகொன்றின் மாறும் கிரயத்தினை மாறாமல் வைத்துக்கொண்டு அதன் விற்பனை விலையினை அதிகரிப்பதனூடாக பங்களிப்பு - விற்பனை விகிதத்தினை 60% இற்கு அதிகரிக்க விரும்புகிறது.
இப்பொருளின் புதிய விற்பனை விலை எதுவாக இருக்கும்?
(1) ரூ. 210 (2) ரூ. 240 (3) ரூ. 250 (4) ரூ. 275 (5) ரூ. 375 (……)

**30.** 5 வருட காலம் கொண்ட செயற்றிட்டமொன்றுக்கு இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு ரூ. 5 000 000 முதலீடு தேவைப்படுகின்றது. இச்செயற்றிட்டத்தின் முடிவில் இதன் எஞ்சிய பெறுமதியானது ரூ. 1 000 000 ஆகும். கணக்கீட்டுத் திரும்பல் வீதமானது (ARR) 20% ஆக இருப்பின், இச்செயற்றிட்டத்தின் சராசரி வருடாந்த இலாபம் எவ்வளவு? (சராசரி வருடாந்த இலாபத்தினைச் சராசரி முதலீட்டினால் பிரிப்பதன் மூலம் ARR கணிக்கப்பட்டுள்ளது. மேலும் இச்செயற்றிட்டமானது ஒவ்வொரு வருடமும் சமமான இலாபத்தினை ஈட்டுகின்றதெனக் கொள்க.)
(1) ரூ. 500 000 (2) ரூ. 600 000 (3) ரூ. 800 000 (4) ரூ. 1 000 000 (5) ரூ. 1 200 000 (……)

● **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைப் புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.**

**31.** பின்வருவனவற்றுள் நிறுவனமொன்றின் பொது நோக்குடைய நிதிக் கூற்றுகளின் கூறுகளாகக் கருதப்படுவனவற்றைக் குறிப்பிடுக.

**ஆம் / இல்லை**

A - நிதி நிலைமைக் கூற்று :……………………
B - நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் :……………………
C - இயக்குனர்கள் அறிக்கை :……………………
D - உரிமையாண்மை மாற்றங்களுக்கான கூற்று :……………………

[பக். 7 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**32.** பின்வரும் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவதற்குப் பயன்படுத்தப்படும் மூலப் பதிவேடுகளைக் குறிப்பிடுக.

| கொடுக்கல்வாங்கல் | மூலப் பதிவேடுகள் |
|---|---|
| A - கடனடிப்படையில் பொருட்களை விற்பனை செய்தல் | :.............................. |
| B - கடன்பட்டோரிடமிருந்து காசோலை ஒன்றைப் பெறுதல் | :.............................. |
| C - கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசோலையொன்றை மறுத்தல் | :.............................. |
| D - கடன்பட்டோர் மீதியொன்றை அறிவிடமுடியாக்கடனாகப் பதிவழித்தல் | :.............................. |

**33.** பின்வரும் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவதற்குப் பொதுப் பேரேட்டில் காணப்படும் கணக்குகளைக் குறிப்பிடுக.

| கொடுக்கல்வாங்கல் | வரவு | செலவு |
|---|---|---|
| A - கடனடிப்படையில் பொருட்களை விற்பனை செய்தல் | :.............................. | .............................. |
| B - கடன்பட்டோர் மீதியொன்றை அறவிடமுடியாக் கடனாகப் பதிவழித்தல் | :.............................. | .............................. |

**34.** பொதுப் பேரேட்டில் பேணப்படும் பின்வரும் கணக்குகளுக்குப் பொருத்தமான வகைப்படுத்தலைக் குறிப்பிடுக.

| கணக்கு | வகைப்படுத்தல் |
|---|---|
| A - பெறுமானத்தேய்வு | :.............................. |
| B - மீள்மதிப்பு ஒதுக்கம் | :.............................. |
| C - வியாபாரக் கொடுக்குமதிகள் | :.............................. |
| D - பெற்ற கழிவு | :.............................. |

**35.** வியாபாரமொன்றின் பின்வரும் கொடுக்கல்வாங்கல்களில் ஏற்படும் **தேறிய தாக்கத்தினை** [(+) அல்லது (–) உடன் கூடிய பெறுமதிகள்] கணக்கீட்டுச் சமன்பாடு எவ்வாறு காட்டுகிறது என்பதனைக் குறிப்பிடுக.

| கொடுக்கல்வாங்கல் | சொத்துக்கள் (ரூ.) | = பொறுப்புக்கள் (ரூ.) | + உரிமையாண்மை (ரூ.) |
|---|---|---|---|
| A - ரூ. 150 000 இற்கு கடனுக்கு வாங்கிய பொருட்கள் | :................ | ................ | ................ |
| B - ரூ. 90 000 கிரயமான பொருட்களை ரூ. 140 000 இற்கு காசுக்கு விற்றல் | :................ | ................ | ................ |

**36.** சுமதி என்பவர் ரூ. 800 000 காசாக முதலீடு செய்து 01.03.2017 இல் சில்லறை வியாபாரமொன்றை ஆரம்பித்தார். 31.03.2017 இல் முடிவடைந்த மாதத்தில் ரூ. 350 000 கிரயமான பொருட்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அவை ரூ. 400 000 காசுக்கு விற்பனை செய்யப்பட்டன. மேலும் இவ்வியாபாரத்தின் இம்மாதத்துக்கான செலவாக ரூ. 60 000 காணப்பட்டதுடன் இவற்றுள் ரூ. 20 000 ஆனது 31.03.2017 இல் சென்மதியாகவுள்ளது. 31.03.2017 இலுள்ளவாறான பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) சொத்துக்கள்: ரூ. :.............. (ஆ) பொறுப்புக்கள்: ரூ. :.............. (இ) உரிமையாண்மை: ரூ. :..............

**37.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சூழ்நிலைக்கும் பிரயோகிக்கக்கூடிய **மிகவும்** பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருக்கள் பின்வருவனவற்றுள் எவை ?

(1) அலகுசார் (2) முன்னெச்சரிக்கை (3) தொடர்ந்துசெல் (4) கணக்கீட்டுக் காலம்

| சூழ்நிலை | கணக்கீட்டு எண்ணக்கரு |
|---|---|
| A - நிதிக் கூற்றுக்களின் அறிக்கையிடும் காலத்தைக் குறிப்பிடல் | :........................ |
| B - நிறுத்திவைத்த வருவாயிலிருந்து உரிமையாளர்களுக்குச் செய்யப்பட்ட பகிர்வினைக் கழித்தல் | :........................ |
| C - பெற்றுக்கொள்ளப்பட்ட கிரயத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தை அளவீடு செய்தல் | :........................ |
| D - இருப்புக்களை அதன் கிரயம் மற்றும் தேறிய தேறத்தக்க பெறுமதி என்பவற்றுள் குறைவானதில் அளவீடு செய்தல் | :........................ |

**38.** கம்பனியொன்று தொடர்பில் பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பேணப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படும் கணக்கீட்டுத் தகவலின் பண்புசார் குணாதிசயங்களைக் குறிப்பிடுக.

| நிலைமை | பண்புசார் குணாதிசயம் |
|---|---|
| A - நியாயப் பெறுமதியில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மீள்மதிப்பிடல் | :.................................. |
| B - கைத்தொழில் நெறிமுறைகளுக்கமைய முதல்உள்முதல்வெளி முறையினைப் பயன்படுத்தி இருப்புக்களை மதிப்பிடல் | :.................................. |
| C - நிதிக் குத்தகையில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்றைச் சொத்தொன்றாக இனங்காணல் | :.................................. |
| D - ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்த ஒரு வாரத்தினுள் இடைக்கால நிதிக் கூற்றுக்களை வழங்குதல் | :.................................. |

[பக். 8 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**39.** பின்வரும் தகவல்கள் விளையாட்டுக் கழகமொன்றின் சந்தாவுடன் தொடர்பானவை.

| விபரம் | 31.03.2017 இல் (ரூ.) | 31.03.2016 இல் (ரூ.) |
|---|---|---|
| முற்பணமாகப் பெற்ற சந்தா | 80 000 | 60 000 |
| நிலுவையாகவுள்ள சந்தா | 30 000 | 20 000 |

அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த சந்தா ரூ. 1 000 ஆகும். 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்தில் 60 அங்கத்தவர்கள் இருந்துள்ளனர். 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வருவனவற்றைக் கணிக்குக.

(அ) வருமானமாக இனங்காணப்பட்ட சந்தா: ரூ. ……………… (ஆ) காசாகப் பெறப்பட்ட சந்தா: ரூ. ……………

**40.** பங்குடைமையொன்றின் நன்மதிப்பானது மதிப்பீடு செய்யப்படும் **இரண்டு** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(1) ……………………………………………………………………………………………………

(2) ……………………………………………………………………………………………………

**41.** பங்குடைமையொன்று தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் **சரியானவையா (சரி)** அல்லது **பிழையானவையா (பிழை)** என்பதனைக் குறிப்பிடுக.

| | கூற்று | சரி/பிழை |
|---|---|---|
| A - | பங்குடைமையொன்றின் நன்மதிப்பானது அதன் இலாபத்தன்மையில் மாற்றம் ஏற்படும்போது மதிப்பீடு செய்யப்படும். | ……………… |
| B - | கம்பனிச் சட்டம் (2007) இன்படி பங்குடைமையானது ஆகக் கூடுதலாக 20 பங்காளர்களைக் கொண்டிருக்க முடியும். | ……………… |
| C - | பங்காளர்களுக்கிடையில் எழுத்து மூலமான உடன்படிக்கையொன்றில்லாது பங்குடைமையானது இருக்க முடியாது. | ……………… |
| D - | 1890 ஆம் ஆண்டின் பங்குடைமைச் சட்டத்தின் பிரிவு 24 ஆனது பங்காளர்களின் மூலதன மீதிக்கு 5% வட்டி செலுத்த வேண்டுமெனக் கூறுகிறது. | ……………… |

**42.** கம்பனியொன்று 01.03.2017 இல் 10 000 சாதாரண பங்குகளுக்கு பங்கொன்று ரூ. 20 இல் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. 15 000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதுடன் அவை விகிதாசார அடிப்படையில் 31.03.2017 இல் ஒதுக்கம் செய்யப்பட்டன. மேலதிக காசானது விண்ணப்பதாரிகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டது. பின்வருவனவற்றைக் கணிக்குக.

(அ) 31.03.2017 இலுள்ளவாறான கூறப்பட்ட மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. …………………………

(ஆ) திருப்பிச் செலுத்திய மேலதிக காசு ரூ. …………………………

**43.** கம்பனி ஒன்றின் 01.04.2016 இலுள்ள கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனமானது பங்கொன்று ரூ. 50 இல் வழங்கப்பட்ட 100 000 பங்குகளைக் கொண்டுள்ளது. இத்திகதியில் கம்பனியானது ரூ. 1 000 000 ஒதுக்கங்களை பங்கொன்று ரூ. 40 விலையில் மூலதனமாக்கியுள்ளது. மேலும் 31.03.2017 இல் காணப்படும் ஒவ்வோர் ஐந்து பங்குகளுக்கும் ஒரு பங்கு வீதம் பங்குகளுக்கான உரிமை வழங்கலானது பங்கொன்று ரூ. 30 விலையில் வழங்கப்பட்டது. தற்போதுள்ள எல்லாப் பங்குதாரரும் உரிமை வழங்கலை முழுமையாகப் பயன்படுத்தியுள்ளனர். பின்வருவனவற்றைக் கணிக்குக.

(அ) 31.03.2017 இலுள்ளவாறு உரிமையாண்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. ……………………

(ஆ) உரிமை வழங்கலின் மூலம் பெறப்பட்ட காசு ரூ. ……………………

**44.** கம்பனியொன்றின் 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றங்களுக்கான கூற்றின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது. **(ரூ.'000)**

| விபரம் | கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | நிறுத்திவைத்த வருவாய்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01.04.2016 இலுள்ளவாறு மீதி | 1 000 | 500 | 200 | 1 700 |
| A | – | 800 | 700 | 1 500 |
| B | 500 | – | (500) | – |
| C | – | – | (100) | (100) |
| D | 600 | – | – | 600 |
| 31.03.2017 இலுள்ளவாறு மீதி | **2 100** | **1 300** | **300** | **3 700** |

மேற்படி அட்டவணையில் A , B, C, D ஆகியவற்றினால் குறிக்கப்படும் உருப்படிகளை இனங்காண்க.

A - ……………………………………………………………………………

B - ……………………………………………………………………………

C - ……………………………………………………………………………

D - ……………………………………………………………………………

[பக். 9 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**45.** பின்வரும் தகவல்களானவை இரண்டு உற்பத்திக் கம்பனிகளின் 31.03.2017 இல் முடிவடைந்த நிதி வருடத்துடன் தொடர்பானவையாகும்.

| விகிதம் | R PLC | Q PLC |
|---|---|---|
| கடன் - உரிமையாண்மை (தடவைகள்) | 1.5 | 0.8 |
| வட்டிக் காப்பு (தடவைகள்) | 2.5 | 3.2 |
| உரிமையாண்மை மீதான திரும்பல் | 25% | 20% |
| விரைவுச் சொத்துக்கள் | 0.8 : 1 | 1.2 : 1 |

மேற்படி கம்பனிகள் தொடர்பில் பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

A - பங்குதாரர்களுக்கு அதிகூடிய வருவாயை உருவாக்கும் கம்பனி ......................

B - வட்டிச் செலவுகளை ஈடுசெய்வதற்கு அதிக ஆற்றல் கொண்டுள்ள கம்பனி ......................

C - சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகளவில் கடன் மூலதனத்தைப் பயன்படுத்தும் கம்பனி ......................

D - குறுங்காலக் கடப்பாடுகளைத் தீர்ப்பதில் அதிகூடிய இயலுமை கொண்ட கம்பனி ......................

**46.** கம்பனியொன்றின் 31.03.2017 இலுள்ளவாறான உரிமையாண்மை மீதான வருவாய் வீதம் மற்றும் கடன் - உரிமையாண்மை வீதம் ஆகியன ஏனைய காரணிகள் மாறாதிருக்கையில் பின்வரும் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களினாலும் **அதிகரிக்குமா (I), குறையுமா (D)** அல்லது **மாறாதிருக்குமா (NC)** என்பதனைக் குறிப்பிடுக. (எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் 31.03.2017 இல் இடம்பெற்றவை எனக் கருதுக.)

| கொடுக்கல்வாங்கல் | உரிமையாண்மை மீதான திரும்பல் வீதம் | கடன் - உரிமையாண்மை வீதம் |
|---|---|---|
| A - வங்கியிலிருந்து 12% வட்டி வீதத்தில் நீண்டகால கடன் ஒன்றைப் பெறல் | ............... | ............... |
| B - தற்போதுள்ள பங்குதாரர்கள் உரிமை வழங்கலை முழுமையாகப் பயன்படுத்தியுள்ள நிலையில் பங்குகளுக்கான உரிமை வழங்கலைச் செய்தல் | ............... | ............... |

**47.** பின்வரும் தகவல்களானவை இரண்டு கிரய நிலையங்களான இயந்திரப் பகுதி மற்றும் ஒருங்கிணைத்தற் பகுதி ஊடாக தனிப்பொருளொன்றை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றுடன் தொடர்பானவையாகும்.

| விபரம் | இயந்திரப் பகுதி | ஒருங்கிணைத்தற் பகுதி |
|---|---|---|
| அலகொன்றிற்கான உறிஞ்சப்பட்ட மேந்தலைக் கிரயங்கள் | ரூ. 300 | ரூ. 100 |
| பொருளொன்றை உற்பத்தி செய்வதற்கான மணித்தியாலங்களின் எண்ணிக்கை | 3 இயந்திர மணித்தியாலங்கள் | 2 ஊழிய மணித்தியாலங்கள் |
| வேலை செய்த மொத்த மணித்தியாலங்கள் | 5 000 இயந்திர மணித்தியாலங்கள் | 6 000 ஊழிய மணித்தியாலங்கள் |

மேந்தலைகளானவை இயந்திரப் பகுதியில் இயந்திர மணித்தியால அடிப்படையிலும் ஒருங்கிணைத்தற் பகுதியில் ஊழிய மணித்தியால அடிப்படையிலும் உறிஞ்சப்படுகின்றன.
பின்வருவனவற்றைக் கணிக்குக.

| | இயந்திரப் பகுதி | ஒருங்கிணைத்தற் பகுதி |
|---|---|---|
| (அ) மேந்தலை உறிஞ்சல் வீதம் (மணித்தியாலமொன்றிற்கு ரூ.) | ............... | ............... |
| (ஆ) உறிஞ்சப்பட்ட மொத்த மேந்தலைக் கிரயம் (ரூ.) | ............... | ............... |

**48.** தனிப்பொருளொன்றை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றின் வருடாந்த பாதீட்டுத் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. இந்நிறுவனத்தின் அடுத்த நிதியாண்டுக்கான பாதிடப்பட்ட செயற்பாட்டு மட்டம் 10 000 அலகுகள் ஆகும்.

| | |
|---|---|
| அலகொன்றின் விற்பனை விலை | ரூ. 100 |
| அலகொன்றிற்கான மூலக்கிரயம் (எல்லாம் மாறும் கிரயங்களாகும்.) | ரூ. 20 |
| அலகொன்றிற்கான மாறும் உற்பத்தி மேந்தலைக் கிரயங்கள் | ரூ. 15 |
| விற்பனை முகவர் தரகு | விற்பனை விலையில் 5% |
| அலகொன்றிற்கான நிலையான உற்பத்தி மேந்தலைக் கிரயம் | ரூ. 12 |
| அலகொன்றிற்கான நிலையான உற்பத்தியல்லா மேந்தலைக் கிரயம் | ரூ. 18 |

பின்வருவனவற்றைக் கணிக்குக.

(அ) 10 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில்:

(1) அலகொன்றிற்கான உற்பத்திக் கிரயம் ரூ. ......................

(2) அலகொன்றிற்கான மொத்தக் கிரயம் ரூ. ......................

(3) அலகொன்றிற்கான மாறும் கிரயம் ரூ. ......................

(ஆ) 6 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் அலகொன்றிற்கான நிலையான கிரயம் ரூ. ......................


[பக். 10 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**49.** கம்பனியொன்றின் 'இலாபம் - தொகை' வரைபடமானது கீழே தரப்பட்டுள்ளது. இவ்வரைபடத்தில் A, B, C ஆகியவற்றினால் குறிப்பிடப்படும் உருப்படிகளைக் குறிப்பிடுக.




A - ..........................................

B - ..........................................

C - ..........................................

**50.** உற்பத்திக் கம்பனியொன்றானது ஏற்கனவேயுள்ள இயந்திரத்திற்குப் பதிலாகப் புதிய இயந்திரமொன்றை வாங்க விரும்புகிறது. இது தொடர்பாக சாத்திய ஆய்வினை நடத்துவதற்காக ஏற்பட்ட கிரயங்கள் ரூ. 50 000 ஆகும். இந்த இயந்திரத்தை வாங்குவது தொடர்பில் பின்வரும் மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| புதிய இயந்திரத்தின் கிரயம் | ரூ. 1 000 000 |
| பழைய இயந்திரத்திலிருந்தான விற்பனைப் பெறுகைகள் | ரூ. 300 000 |
| மேலதிக தொழிற்படு மூலதனம் | ரூ. 200 000 |
| இம்முதலீட்டின் திரும்பப்பெறும் காலம் | 3 வருடங்கள் |
| புதிய இயந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் | 4 வருடங்கள் |

தேறிய செயற்பாட்டு காசு உட்பாய்ச்சலானது ஒவ்வொரு வருடமும் சமமானது எனக் கருதுக.

பின்வருவனவற்றைக் கணிக்குக.

(அ) ஆரம்ப காசு வெளிப்பாய்ச்சல் ரூ. ........................

(ஆ) எதிர்பார்க்கப்படும் வருடாந்த தேறிய செயற்பாட்டு காசு உட்பாய்ச்சல் ரூ. ........................

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

ගිණුම්කරණය II
கணக்கீடு II
Accounting II

33 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள் :**

- ✻ **முதலாம் இரண்டாம்** வினாக்கள் உட்பட **ஆறு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ✻ ஒவ்வொரு வினாவுக்குமான விடையானது **புதிய தாளில்** ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
- ✻ உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

**1.** ஷவிக் PLC ஆனது உற்பத்தி மற்றும் வியாபாரக் கம்பனியாகும். இது தனது சொந்த உற்பத்திப் பொருட்களுக்கு மேலதிகமாக ஏனைய கம்பனிகளிடமிருந்தும் பொருட்களை கொள்வனவு செய்து விற்பனை செய்கின்றது. இதன் 31.03.2017 இலுள்ளவாறான சுருக்கிய பரீட்சைமீதி கீழே தரப்பட்டுள்ளது.

| **விபரம்** | **வரவு (ரூ.'000)** | **செலவு (ரூ.'000)** |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கொண்டுசெல் மீதி | 27 500 | |
| உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் கிரயம் | 12 000 | |
| பொருட்கள் கொள்வனவு | 6 000 | |
| 31.03.2017 இல் மூலப்பொருட்கள் இருப்பு | 2 000 | |
| 01.04.2016 இல் பொருட்கள் இருப்பு | 3 000 | |
| விநியோகக் கிரயங்கள் | 8 000 | |
| நிர்வாகச் செலவுகள் | 8 400 | |
| கொள்வனவுகள் மற்றும் செலவுகள் மீது செலுத்திய பெறுமதிசேர் வரி (VAT) | 2 300 | |
| வங்கிக்கடனிற்காக செலுத்திய வட்டி | 200 | |
| செலுத்திய வருமான வரி | 1 900 | |
| செலுத்திய பங்கிலாபம் | 1 700 | |
| வங்கி மற்றும் காசு | 6 000 | |
| விற்பனைகள் | | 43 000 |
| விற்பனை ஊடாக சேகரிக்கப்பட்ட VAT | | 2 800 |
| வங்கிக்கடன் | | 12 000 |
| 01.04.2016 இல் வருமானவரிக்கான ஏற்பாடு (31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கானது) | | 800 |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | | 15 000 |
| 01.04.2016 இல் நிறுத்திவைத்த வருவாய்கள் | | 5 400 |
| | **79 000** | **79 000** |

**மேலதிக தகவல்கள்:**

31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் பின்வருவனவற்றிற்குச் சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.

(i) பொருள் இருப்புகளின் கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதியானது 31.03.2017 இலுள்ளவாறு பின்வருமாறு இருந்தது.

| | **கிரயம் (ரூ.)** | **தேறிய தேறக்கூடிய பெறுமதி (ரூ.)** |
|---|---|---|
| உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் | 1 000 000 | 1 200 000 |
| கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் | 1 300 000 | 1 000 000 |

இருப்பினை மதிப்பிடும் போது உற்பத்திச் செய்யப்பட்ட பொருட்களும் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களும் வெவ்வேறாகக் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

(ii) 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான கணக்காய்வுக் கட்டணங்கள் ரூ. 600 000 ஆகும். இவற்றுள் ரூ. 400 000 இவ்வருடத்தில் செலுத்தப்பட்டுள்ளது. செலுத்தப்பட்ட தொகை மாத்திரம் நிர்வாகச் செலவொன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

(iii) இவ்வருடத்தில் இயக்குனர்களுக்கு ஊதியமாகச் செலுத்தப்பட்டுள்ள ரூ. 2 200 000 ஆனது நிர்வாகச் செலவொன்றாக இனங்காணப்பட்டுள்ளது. எனினும் இவ்வருடத்துக்கான இயக்குனர்கள் ஊதியம் ரூ. 1 800 000 ஆகும்.

(iv) செலுத்திய வருமானவரியானது முன்னைய வருடத்துக்காகச் செலுத்திய ரூ. 900 000 இனையும் நடைமுறை வருடத்தின் முதல் மூன்று காலாண்டுகளுக்காகச் செலுத்திய கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியுள்ளது. நடைமுறை வருடத்தின் இறுதிக் காலாண்டுக்கான வருமானவரிப் பொறுப்பானது ரூ. 500 000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையானது இதுவரை சீராக்கம் செய்யப்படவில்லை.

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(v) 31.03.2017 இலுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும் அவற்றின் திரண்ட பெறுமானத்தேய்வு உள்ளடக்கமும் பின்வருமாறு இருந்தது.

| விபரம் | கிரயம்/பெறுமதி (ரூ.'000) | திரண்ட பெறுமானத்தேய்வு (ரூ.'000) | கொண்டுசெல் மீதி (ரூ.'000) |
|---|---|---|---|
| காணி (01.04.2016 இல்) | 10 000 | – | 10 000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 21 000 | 9 700 | 11 300 |
| மோட்டார் வாகனங்கள் (விநியோக வான்கள்) | 4 000 | 2 000 | 2 000 |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 7 000 | 2 800 | 4 200 |
| **மொத்தம்** | **42 000** | **14 500** | **27 500** |

காணியானது மீள்மதிப்பிடப்பட்ட தொகையில் பெறுமதியிடப்பட்டுள்ளதுடன் ஏனைய சகல சொத்துக்களும் கிரயத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன. காணியானது இரண்டாந் தடவையாக 31.03.2017 இல் ரூ. 12 000 000 ஆக மீள்மதிப்பு செய்யப்பட்டுள்ளது. இது இன்னமும் பதியப்படவில்லை. இச்சொத்தானது முன்னைய வருடம் முதற்தடவையாக மீள்மதிப்பு செய்யும்போது ஏற்பட்ட பற்றாக்குறையானது ரூ. 1 200 000 என அறிக்கையிடப்பட்டுள்ளது.

(vi) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களானவை (காணி தவிர) வருடாந்தம் நேர்கோட்டு அடிப்படையில் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படுகிறது. நடைமுறை ஆண்டுக்கான பெறுமானத்தேய்வானது செய்யப்பட்டுள்ளது. எனினும் 01.04.2016 இலுள்ள விநியோக வான்களின் எஞ்சியுள்ள பயன்தரு ஆயுட்காலம் 8 வருடங்கள் ஆகும் என செய்யப்பட்ட திருத்தமானது நடைமுறை ஆண்டுக்கான பெறுமானத்தேய்வினைச் செய்யும் பொழுது கருத்திற் கொள்ளப்படவில்லை. (விநியோக வான்களுக்கான எஞ்சிய பெறுமதி எதுவும் இல்லை எனக் கருதுக.)

(vii) லொறி ஒன்றானது 5 வருட நிதிக் குத்தகை அடிப்படையில் 01.04.2016 இல் பெறப்பட்டது. இதன் நியாயப்பெறுமதி ரூ. 5 000 000 ஆகும். இச் சொத்தின் உடைமையானது குத்தகையின் தவணை இறுதியில் கம்பனிக்கு மாற்றப்படும். குத்தகை வட்டியானது முதலாம், இரண்டாம் வருடங்களுக்கு முறையே ரூ. 500 000, ரூ. 418 000 ஆகும். அத்துடன் மீதமாகவுள்ள மூன்று வருடங்களுக்கான மொத்த குத்தகை வட்டியானது ரூ. 682 000 ஆகும். வருடாந்த குத்தகை தவணைக் கட்டணம் ரூ. 1 320 000 ஆகும். இது வருட முடிவில் செலுத்தப்பட்டுள்ளதுடன் விநியோகக் கிரயமாகப் பதியப்பட்டுள்ளது. இக்கொடுக்கல்வாங்கல் தொடர்பில் வேறு எதுவித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(viii) இவ்வருடத்தில் ரூ. 5 000 000 சாதாரண பங்குகள் வழங்கப்பட்டு முழுத்தொகையும் பெறப்பட்டுள்ளது. இத்தொகையானது விற்பனைக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.

(ix) வங்கிக் கடனானது 10% வருடாந்த வட்டியில் 01.01.2017 இல் பெறப்பட்டுள்ளது. இக்கடனைக் கொடுத்துத் தீர்த்தலானது இரண்டு வருடங்களின் பின்னரே தொடங்கப்படும். எனினும் இக்கடனிற்கான வட்டியானது தொடக்கத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும். 2 மாதங்களுக்கான வட்டி மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:**

ஷவிக் PLC இன் LKAS 1 (நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்) இன்படி பிரசுரிப்பதற்குத் தேவையான பின்வரும் நிதிக் கூற்றுக்கள் (குறிப்புக்கள் உட்பட):

(1) 31.03.2017 இல் முடிவடையும் வருடத்துக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் முற்றுமடங்கிய வருமானக்கூற்று
(2) 31.03.2017 இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று
(3) 31.03.2017 இல் முடிவடையும் வருடத்துக்கான உரிமையாண்மை மாற்றங்களுக்கான கூற்று

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**2.** **(அ)** அமலினி, கமலினி, நிமலினி ஆகியோர் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் பங்குடைமை ஒன்றை நடாத்தினர்.

- எல்லாப் பங்காளர்களும் ஆரம்ப மூலதன மீதியின் மீது வருடாந்தம் 10% வட்டிக்கு உரித்துடையவர்கள்
- இலாப நட்டமானது அமலினி, கமலினி, நிமலினி ஆகியோருக்கிடையே முறையே 3:2:1 என்ற விகிதத்தில் பகிரப்படும்.

பங்குடைமையின் 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான முன்வரையப்பட்ட வருமானக் கூற்றுக்கமைய இலாபமானது (பங்காளர்களுக்கான பகிர்வுகளுக்கு முன்னர்) ரூ. 3 400 000 ஆக இருந்தது. எனினும் அதனைத் தொடர்ந்து பங்குடைமையின் கணக்கீட்டுப் பதிவுகளிலுள்ள பின்வரும் வழுக்கள் வெளிக் கொண்டு வரப்பட்டுள்ளன:

(i) ஊழியர்களுக்கான சம்பளம் ரூ. 360 000 ஆனது சம்பளக் கணக்கில் ரூ. 630 000 ஆக வரவு வைக்கப்பட்டுள்ளது.

(ii) வங்கிக்கடனுக்காகச் செலுத்திய வட்டி ரூ. 100 000 ஆனது வட்டி வருமானக் கணக்கில் ரூ. 10 000 ஆகச் செலவு வைக்கப்பட்டுள்ளது.

(iii) 01.04.2016 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 300 000 பெறுமதியான காரியாலய உபகரணங்கள் காரியாலய செலவாகப் பதியப்பட்டுள்ளது. (காரியாலய உபகரணங்களுக்கு வருடாந்தம் 10% நேர்க்கோட்டு அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்படும்.)

(iv) அமலினியின் வருடாந்த ஆயுளுறுதிக் கட்டணம் ரூ. 150 000 ஆனது பங்குடைமையால் செலுத்தப்பட்டுள்ளதுடன் இது நிறுவனத்தின் காப்புறுதிச் செலவாக கணக்குக்கு எடுக்கப்பட்டுள்ளது.

31.03.2017 இல் அமலினி பங்குடைமையில் இருந்து இளைப்பாறினார். இத்திகதியில் பங்குடைமையின் நன்மதிப்பானது ரூ. 1 800 000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கணக்குப் புத்தகங்களில் நன்மதிப்புக் கணக்கானது பராமரிக்கப்படுவதில்லை. எல்லாச் சீராக்கங்களும் பங்காளர்களின் மூலதனக் கணக்குகளினூடாக செய்யப்படுகின்றன. அமலினிக்கு செலுத்த வேண்டிய தொகையினை பங்குடைமையின் கடனாகப் பராமரிப்பதற்கு இணங்கப்பட்டுள்ளது. கமலினியும் நிமலினியும் இலாப நட்டங்களை முறையே 2:1 எனும் விகிதத்தில் பகிர்ந்து பங்குடைமையைத் தொடர்ந்து நடாத்த சம்மதித்துள்ளனர்.

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

01.04.2016 இலுள்ளவாறான பங்காளர்களின் மூலதனம் மற்றும் நடைமுறைக் கணக்கு செலவு மீதிகள் பின்வருமாறு இருந்தன.

| | மூலதனக் கணக்குகள்: (ரூ.'000) | நடைமுறைக் கணக்குகள்: (ரூ.'000) |
|---|---|---|
| அமலினி | 4 200 | 800 |
| கமலினி | 3 000 | 500 |
| நிமலினி | 2 000 | 300 |

**வேண்டப்படுவது:**

(1) வழுக்களைத் திருத்துவதற்கான நாளேட்டுப் பதிவுகள் (விளம்பல்களுடன்)

(2) 31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பங்குடைமையின் சரியான இலாபத்தினைக் காட்டும் கூற்று

(3) 31.03.2017 இலுள்ளவாறான பங்காளர்களின் மூலதனம் மற்றும் நடைமுறைக் கணக்கு

**(10 புள்ளிகள்)**

**(ஆ)** கூரை ஓடுகளை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றின் தொழிற்சாலையானது இயந்திரப்பகுதி மற்றும் முடிவுறுத்தற் பகுதி எனும் இரண்டு உற்பத்திக் கிரய நிலையங்களைக் கொண்டுள்ளது. மேலும் இது தொழிற்சாலை காணப்படும் கட்டடத்திலேயே அமைந்துள்ள சேவைக் கிரய நிலையமான களஞ்சியத்தினையும் கொண்டுள்ளது. இந்நிறுவனமானது 'A', 'B' எனும் இரண்டு வகையான கூரை ஓடுகளை உற்பத்தி செய்கிறது. பின்வரும் பாதிடப்பட்ட கிரயத் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| | ரூ.'000 |
|---|---|
| **சம்பளங்கள்:** | |
| தொழிற்சாலை மேற்பார்வையாளர்கள் | 240 |
| களஞ்சிய ஊழியர்கள் | 150 |
| நிர்வாக உத்தியோகத்தர்கள் | 400 |
| **வாடகை:** | |
| களஞ்சியம் உள்ளடங்கலாக தொழிற்சாலைக் கட்டடம் | 680 |
| நிர்வாகக் கட்டடம் | 320 |
| **பெறுமானத்தேய்வு :** | |
| இயந்திரம் | 100 |
| **மின்சாரம்:** | |
| களஞ்சியம் உள்ளடங்கலாக தொழிற்சாலை | 400 |
| நிர்வாகக் கட்டடம் | 120 |
| **காப்புறுதி:** | |
| இயந்திரங்கள் | 80 |
| **திருத்தங்கள்** | |
| இயந்திரங்கள் | 200 |
| **பராமரிப்பு:** | |
| களஞ்சியம் உள்ளடங்கலாக தொழிற்சாலைக் கட்டடம் | 340 |
| நிர்வாகக் கட்டடம் | 150 |

பின்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன.

| விபரம் | இயந்திரப் பகுதி | முடிவுறுத்தல் பகுதி | களஞ்சியம் |
|---|---|---|---|
| இயந்திரத்தின் கிரயம் (ரூ.) | 750 000 | 250 000 | – |
| வேலையாட்களின் எண்ணிக்கை | 25 | 75 | – |
| தளப் பரப்பு (சதுர மீற்றர்) | 15 000 | 15 000 | 4 000 |
| மின்சாரம் (கிலோவாற் மணித்தியாலம்) | 12 000 | 7 000 | 1 000 |
| இயந்திர மணித்தியாலம் | 20 000 | 6 000 | – |
| நேர் ஊழிய மணித்தியாலம் | 2 000 | 10 000 | – |

- களஞ்சியத்தின் மேந்தலைகளானவை இயந்திரம் மற்றும் முடிவுறுத்தற் பகுதிகளுக்கிடையே சமமாக மீள் பகிர்வு செய்யப்படுகிறது.
- உற்பத்தி மேந்தலைகளானவை இயந்திரப் பகுதியில் இயந்திர மணித்தியால அடிப்படையிலும் முடிவுறுத்தற் பகுதியில் ஊழிய மணித்தியால அடிப்படையிலும் உறிஞ்சப்படுகிறது.
- 'A' வகை கூரை ஓடு ஒன்றினை உற்பத்தி செய்வதற்கு இயந்திரப் பகுதி மற்றும் முடிவுறுத்தற் பகுதிகளில் முறையே 4 இயந்திர மணித்தியாலங்களும் 2 ஊழிய மணித்தியாலங்களும் செலவழிக்கப்படுகிறது.
- 'A' வகை கூரை ஓடு ஒன்றினை உற்பத்தி செய்வதற்கு நேர்மூலப்பொருள் மற்றும் நேர் ஊழியக் கிரயங்கள் என்பன முறையே ரூ. 162, ரூ. 100 ஆகுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:**

(1) பகிர்வு அடிப்படையைக் குறிப்பிட்டு உற்பத்தி மேந்தலை பகுப்பாய்வு அட்டவணை

(2) இயந்திரம், முடிவுறுத்தல் பகுதிகளுக்கான உற்பத்தி மேந்தலை உறிஞ்சுதல் வீதங்கள்

(3) 'A' வகை கூரை ஓடு ஒன்றுக்கான உற்பத்திக் கிரயம்

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**3.** வியாபாரமொன்றில் 2017 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்களின் தாக்கங்களை பின்வரும் கணக்கீட்டு சமன்பாடுகள் காட்டுகின்றன. உரிமையாளர் வியாபாரத்திலிருந்து இம்மாதத்தில் பணம் எதனையும் பற்றவில்லை.

**(ரூ.'000)**

| மீதிகளும் கொடுக்கல் வாங்கல்களும் | சொத்துக்கள் | | | = | பொறுப்புக்கள் + | | உரிமையாண்மை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | இருப்புக்கள் | வியாபார வருமதிகள் | வங்கியிலுள்ள காசு | வங்கிக் கடன் | வியாபார கொடுக்குமதிகள் | மூலதனம் | நிறுத்தி வைத்த வருவாய் |
| 01.01.2017 இலுள்ளவாறான மீதிகள் | 2 000 | 1 300 | 500 | 200 | 1 000 | 800 | 1 000 | 1 200 |
| 1 | + 1 000 | | | | + 1 000 | | | |
| 2 | | + 250 | | | | + 250 | | |
| 3 | | | | + 600 | | | + 600 | |
| 4 | | | | – 400 | | | | – 400 |
| 5 | | – 1 000 | + 1 800 | | | | | + 800 |
| 6 | | | – 500 | | | – 500 | | |
| 7 | – 50 | | | | | | | – 50 |
| 8 | | | – 150 | | | | | – 150 |
| 9 | | | | –180 | –150 | | | – 30 |
| 10 | | + 200 | – 250 | | | | | – 50 |
| **31.01.2017 இலுள்ளவாறான மீதிகள்** | **2 950** | **750** | **1 400** | **220** | **1 850** | **550** | **1 600** | **1 320** |

**வேண்டப்படுவது:**

(1) மேலே 1 தொடக்கம் 10 வரையில் குறிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களையும் அதன் பெறுமதிகளுடன் விபரிக்குக.

(2) 31.01.2017 இல் முடிவடையும் மாதத்துக்கான இலாபம் அல்லது நட்டம்

(3) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை நடைமுறை மற்றும் நடைமுறையல்லாதது எனக் காட்டக்கூடியவாறு 31.01.2017 இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

**4.** **(அ)** பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றின் 2017 ஜுலை மாதத்திற்கான ஊழியங்கள் தொடர்பானவையாகும்:

- மாதத்திற்கான மொத்தக் கூலிகள் ரூ. 680 000 ஆகும். இது பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.
  - (i) வழமையாக வேலை செய்த 4 800 மணித்தியாலங்களுக்கு மணித்தியாலமொன்றிற்கு ரூ. 100 வீதம் அடிப்படைக் கூலி
  - (ii) வேலைசெய்த 500 மணித்தியாலங்களுக்கு மணித்தியாலமொன்றிற்கு ரூ. 150 வீதம் மேலதிக வேலைநேர கூடுதல் கொடுப்பனவு
  - (iii) இலாப அடிப்படையில் ரூ. 100 000 மிகை ஊதியம்
  - (iv) இயந்திரமொன்றை நிறுவுவதற்காக வெளித் தரப்பொன்றிற்குச் செலுத்தப்பட்ட ரூ. 25 000 ஊழியக் கட்டணங்கள்
- மாதத்திற்கான கூலிகளிலிருந்து கழிப்பனவுகள் பின்வருமாறு:
  - (i) ஊழியர் சேமலாப நிதிக்கான (EPF) பங்களிப்பு ரூ. 48 000
  - (ii) ஊழியர் கடன் மீதான தவணைக் கட்டணம் ரூ. 120 000
  - (iii) ஊழியர் நலன்புரி நிதிக்கான பங்களிப்பு ரூ. 25 000
- ஊழியர் சேமலாப நிதிக்கு வேலை கொள்வோர் மற்றும் ஊழியர் பங்களிப்புகள் முறையே 15%, 10% ஆகும். இக்கம்பனியானது ஊழியர் சேமலாப நிதி பங்களிப்புக்களை அடிப்படைக் கூலிகளின் அடிப்படையில் கணிக்கின்றது.

**வேண்டப்படுவது:**

2017 ஜுலை மாதத்துக்கான பின்வரும் கணக்குகள்:

(1) கூலிகள்

(2) கூலிகள் கட்டுப்பாடு

(3) ஊழியர் சேமலாப நிதிச் செலவுகள்

(4) ஊழியர் சேமலாப நிதிக் கொடுக்குமதிகள்

**( 05 புள்ளிகள்)**

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

(ஆ) சில்லறை வியாபாரமொன்றில் பொருட்கள் கொள்வனவு, விற்பனை தொடர்பில் முதலாம் மாத செயற்பாட்டின் போது பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன.

| திகதி | விபரம் | தொகை (ரூ.'000) |
|---|---|---|
| 02.01.2017 | காசுக்கு கொள்வனவுகள் | 200 |
| 08.01.2017 | காசுக்கு விற்பனைகள் | 300 |
| 10.01.2017 | நாவலனிடமிருந்து கடனுக்கு கொள்வனவுகள் | 500 |
| 12.01.2017 | நாவலனிடமிருந்து கொள்வனவு செய்த பொருட்களை திருப்பி அனுப்பியது | 100 |
| 15.01.2017 | காசுக்கு கொள்வனவுகள் | 400 |
| 16.01.2017 | தாவீதுக்கு கடனுக்கு விற்பனை | 500 |
| 18.01.2017 | ரூ. 20 000 கழிவினைப் பெற்றதன் பின்னர் நாவலனுக்கு கொடுப்பனவு | 180 |
| 20.01.2017 | சுனந்தனிடம் இருந்து கடனுக்கு கொள்வனவுகள் | 300 |
| 22.01.2017 | நாயகத்திற்கு கடனுக்கு விற்பனைகள் | 400 |
| 24.01.2017 | நாயகத்தினால் திருப்பி அனுப்பிய பொருட்கள் | 150 |
| 25.01.2017 | தாவீதிடம் இருந்து பெற்ற காசு | 400 |
| 26.01.2017 | ரூ. 10 000 கழிவினைப் பெற்ற பின்னர் சுனந்தனுக்கு கொடுப்பனவு | 290 |
| 30.01.2017 | ரூ. 20 000 கழிவினை அனுமதித்ததன் பின்னர் நாயகத்திடம் இருந்து பெற்ற காசு | 230 |

- 31.01.2017 இல் இருப்பின் கிரயம் ரூ. 300 000 ஆக இருந்தது.

**வேண்டப்படுவது:**

2017 ஜனவரி மாதத்திற்கான பின்வருபவை :

(1) பிரித்தெடுக்கப்பட்ட காசுப் பெறுவனவுகள் நாளேடு மற்றும் காசுக் கொடுப்பனவுகள் நாளேடு

(2) பொதுப் பேரேட்டில் பின்வரும் கணக்குகள்:

(i) கொள்வனவுகள்

(ii) விற்பனைகள்

(iii) கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(iv) கடன்பட்டோர் கட்டுப்பாடு

(3) மொத்த இலாபக் கணிப்பீடு

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

5. (அ) பின்வரும் தகவல்கள் மங்களேஸ் PLC தொடர்பானவை.

31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது:

| விபரம்: | ரூ.'000 |
|---|---|
| விற்பனைகள் | 6 300 |
| வருடத்துக்கான வரிக்குப் பின்னரான இலாபம் | 1 200 |
| வட்டிச் செலவுகள் | 300 |
| வருடத்துக்கான வரி | 600 |

31.03.2017 இலுள்ளவாறு:

| மொத்தச் சொத்துக்கள்: | ரூ.'000 |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 3 000 |
| இருப்பு | 500 |
| வியாபர வருமதிகள் | 800 |
| காசு | 200 |
| **மொத்தப் பொறுப்புக்கள்:** | |
| வியாபார கொடுக்குமதிகள் | 500 |
| வங்கிக்கடன் (3 வருடங்களுக்குப் பின்னர் செலுத்தத்தக்கது) | 1 000 |

**மேலதிகத் தகவல்கள்:**

(i) 31.03.2016 இல் வியாபார வருமதிகள் ரூ. 600 000 ஆக இருந்தது.

(ii) சகல விற்பனைகளும் கடன் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளன.

[பக். 6 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk



**வேண்டப்படுவது:**

31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான:

(1) நடைமுறை விகிதம்

(2) கடன்பட்டோர் புரள்வு விகிதம் (சராசரி கடன்பட்டோர் அடிப்படையில்)

(3) உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதம்

(4) வட்டிக் காப்பு விகிதம்

(5) சொத்துக்கள் புரள்வு விகிதம் (வருட இறுதியிலுள்ள சொத்துக்களின் அடிப்படையில்)

**(05 புள்ளிகள்)**

**(ஆ)** உதயன் விளையாட்டுக் கழகமானது அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களின் சுகாதார நிலைமையை முன்னேற்றுவதனை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு நீச்சல் தடாகம் ஒன்றும் உடற்பயிற்சி நிலையமொன்றும் காணப்படுகிறது.

அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த சந்தா ரூ. 10 000 ஆகும். இது விளையாட்டுக் கழகத்தில் சேரும் போது செலுத்தப்பட வேண்டும். எனினும் சந்தாவானது, வருடத்தில் உறுப்பினராக இருக்கும் மாதங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வருமானத்தில் இனங்காணப்படுகிறது. 31. 03. 2017 இல் 105 அங்கத்தவர்கள் காணப்பட்டுள்ளதுடன் அவர்களின் உள்ளடக்கம் பின்வருமாறு:

| **விபரம்** | **அங்கத்தவர் எண்ணிக்கை** |
|---|---|
| 01.04.2016 இலுள்ள அங்கத்தவர்கள் .................. | 60 |
| இவ்வருடத்தில் இணைந்த புதிய அங்கத்தவர்கள்: | |
| 01.07.2016 இல் .................................................... | 30 |
| 01.10.2016 இல் .................................................... | 15 |

01.04.2016 இல் சந்தா முற்பணக் கொடுப்பனவுகள் எதுவும் காணப்படவில்லை என்பதுடன் 31.03.2017 இல் சந்தா நிலுவைகள் எதுவும் காணப்படவில்லை.

விளையாட்டுக் கழகத்தின் வசதிகளை அங்கத்தவர் அல்லாதவர்களும் மாதாந்த அடிப்படையில் காசிற்குப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் நடைமுறை ஆண்டில் அவர்கள் வசதிகளைப் பயன்படுத்திய விபரம் பின்வருமாறு இருந்தது.

| பயன்படுத்தப்பட்ட வசதிகள் | நபர் ஒருவருக்கான மாதாந்த கட்டணம் | பயன்படுத்திய நபர்களின் எண்ணிக்கை | பயன்படுத்திய மாதங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நீச்சல் தடாகம் மற்றும் உடற்பயிற்சி நிலையம் ஆகிய இரண்டும் | ரூ. 1 000 | 30 | 6 |
| | | 20 | 8 |
| நீச்சல் தடாகம் அல்லது உடற்பயிற்சி நிலையம் | ரூ. 500 | 60 | 10 |

மேலும் விளையாட்டுக் கழகமானது வெளித்தரப்பினர் விளையாட்டு விழாக்களை நடாத்துவதற்கு நீச்சல் தடாகத்தினை நாளாந்த கட்டணமான ரூ. 150 000 இல் வாடகைக்கு விடுகின்றது. இதில் 80% கட்டணமானது முதற்பதிவு செய்யும் போதும் மிகுதிக் கட்டணமானது விழாக்கள் நடாத்தப்படும் நாளிலும் செலுத்தப்படல் வேண்டும். இவ்வருடத்தில் இரண்டு விளையாட்டு விழாக்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அவற்றில் முதலாவது விழா 3 நாட்களும் இரண்டாவது விழா 2 நாட்களும் இடம்பெற்றுள்ளது. மேலும் 08.04.2017 இல் நடாத்தப்படவுள்ள விழாவொன்றில் நீச்சல் தடாகத்தைப் பயன்படுத்துவதற்காக 20. 03. 2017 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வருடத்தில் ஏற்பட்ட மொத்தச் செலவுகள் ரூ. 1 370 000 ஆக இருந்தது. இவை காசு மூலம் செலுத்தப்பட்டுள்ளன.

விளையாட்டுக் கழகத்தின் சொத்துக்களின் கொண்டுசெல் மீதிகள்:

| **சொத்துக்கள்:** | **31. 03. 2017 இல் (ரூ.'000)** | **31. 03. 2016 இல் (ரூ.'000)** |
|---|---|---|
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | 8 500 | 9 250 |
| 12% நிலையான வைப்பு | 1 500 | – |
| காசு | ? | 400 |

31.03.2016 இல் பொறுப்புக்கள் எதுவும் காணப்படவில்லை. மேலும் இவ்வருடத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் எதுவும் பெற்றுக் கொள்ளப்படவோ அல்லது அகற்றப்படவோ இல்லை.

ஒரு வருடத்திற்கான நிலையான வைப்பானது 01.07.2016 இல் தொடங்கப்பட்டுள்ளதுடன் இதன் வட்டியானது முதிர்ச்சிக்கால முடிவில் பெறப்படும்.

**வேண்டப்படுவது:**

விளையாட்டு கழகத்திற்கான பின்வருவன:

(1) 31.03.2017 இல் முடிவடையும் வருடத்திற்கான காசுக் கணக்கு

(2) 31.03.2017 இல் முடிவடையும் வருடத்திற்கான வருமானக் கூற்று

(3) 31.03.2017 இலுள்ளவாறான பொறுப்புக்கள் (ஒவ்வொரு உருப்படியையும் தனித்தனியாகக் குறிப்பிடுக.)

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

[பக். 7 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



6. (அ) கம்பனியொன்று ரூ. 1 200 000 கிரயத்தைக் கொண்ட புதிய இயந்திரமொன்றைக் வாங்குவதற்கு விரும்புகிறது. இவ்வியந்திரத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்கள் ஆகவும் அதன் எஞ்சிய பெறுமதி ரூ. 200 000 ஆகவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வியந்திரம் உற்பத்திப்பொருளொன்றை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் என்பதுடன் இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் வருடாந்த உற்பத்தி பின்வருமாறு:

| **வருடம்** | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| **உற்பத்தி (அலகுகள்)** | 500 | 500 | 500 | 600 | 600 |

அலகொன்றிற்கான எதிர்பார்க்கப்படும் விற்பனை விலையானது ரூ. 2 000 ஆகும். எதிர்பார்க்கப்படும் அலகு உற்பத்திக் கிரயம் ரூ. 1 000 ஆக இருப்பதுடன் வருடாந்த உற்பத்தி மேந்தலைகள் (பெறுமானத்தேய்வு உட்பட) ரூ. 300 000 ஆக இருக்கும். இச்செயற்றிட்டத்திலிருந்து தேவைப்படும் திரும்பல் வீதம் 10% ஆகும்.

**வேண்டப்படுவது:**

(1) செயற்றிட்டத்தின் காசு உட்பாய்ச்சல்கள், காசு வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் தேறிய நிகழ்காலப் பெறுமதி (விடையளிப்பதற்கு கீழே காணப்படுவது போன்ற வடிவமைப்பைப் பயன்படுத்துக.)

**(ரூ.'000)**

| வருடம் | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| காசு உட்பாய்ச்சல்கள்: | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| காசு வெளிப்பாய்ச்சல்கள்: | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| தேறிய காசுப்பாய்ச்சல்கள் | | | | | | |
| கழிவீட்டுக் காரணி 10% (இரண்டு தசம தானத்தில்) | 1 | 0.91 | 0.83 | 0.75 | 0.68 | 0.62 |
| தேறிய காசுப்பாய்ச்சலின் நிகழ்காலப் பெறுமதி | | | | | | |
| செயற்றிட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதி | | | | | | |

(2) தேறிய நிகழ்காலப் பெறுமதி அடிப்படையில் செயற்றிட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்ளாமல் விடுவதற்கான பிரேரணை

**(05 புள்ளிகள்)**

(ஆ) பின்வரும் தகவல்கள் ரவீந்திரன் PLC யுடன் தொடர்படையவையாகும்.

- 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான பிரித்தெடுக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று:

| | **ரூ.'000** |
|---|---|
| மொத்த இலாபம் .................................... | 5 600 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரண விற்பனை மீதான ஆதாயம் | 700 |
| செயற்பாட்டுச் செலவுகள் .................................... | (800) |
| பெறுமானத்தேய்வு .................................... | (1 200) |
| நிதிச் செலவுகள் .................................... | (1300) |
| வரிக்கு முன்னரான இலாபம் .................................... | 3 000 |
| வருமான வரி .................................... | (1 800) |
| வருடத்துக்கான இலாபம் .................................... | 1 200 |

- சுருக்கிய நிதி நிலைமைக் கூற்றுக்கள்:

| **விபரம்** | **31.03.2017 இல் (ரூ.'000)** | **31.03.2016 இல் (ரூ.'000)** |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் – கிரயத்தில் | 37 000 | 30 000 |
| திரண்ட பெறுமானத்தேய்வு .................................... | (12 000) | (14 900) |
| | 25 000 | 15 100 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| இருப்புக்கள் .................................... | 2 000 | 3 000 |
| வியாபர வருமதிகள் .................................... | 9 000 | 8 000 |
| காசும் காசுக்குச் சமமானவையும் .................................... | 2 000 | 1 900 |
| **மொத்தச் சொத்துக்கள்** .................................... | 38 000 | 28 000 |

[பக். 8 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

| | | |
|---|---|---|
| **உரிமையாண்மை** | | |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள்................ | 18 000 | 10 000 |
| நிறுத்திவைத்த வருவாய்கள்........................................ | 2 100 | 1 800 |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்:** | | |
| வங்கிக் கடன்............................................................ | 7 000 | 8 000 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| வியாபரக் கொடுக்குமதிகள் ........................................ | 6 000 | 4 000 |
| சென்மதி நிதிச் செலவுகள்.......................................... | 4 000 | 3 000 |
| சென்மதி வருமானவரி................................................ | 900 | 1 200 |
| **மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்.........** | 38 000 | 28 000 |

**மேலதிக தகவல்கள்:**

(i) ரூ. 9 000 000 இற்கு வாங்கப்பட்ட ஆதனம் மற்றும் உபகரண உருப்படியொன்று 31.03.2017 இல் காசுக்கு விற்பனை செய்யப்பட்டது. இத்திகதியில் இச்சொத்தின் திரண்ட பெறுமானத்தேய்வு ரூ. 4 100 000 ஆகும்.

(ii) இவ்வருடத்தில் ரூ. 900 000 பங்கிலாபங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

(iii) இவ்வருடத்தில் பங்கு வழங்கல் மூலம் பெற்ற காசு ரூ. 8 000 000 ஆக இருந்தது.

**வேண்டப்படுவது:**

LKAS 7 (காசுப் பாய்ச்சற் கூற்று) இன்படி 31.03.2017 இல் முடிவடையும் வருடத்துக்கான ரவீந்திரன் PLC இன் காசுப் பாய்ச்சற் கூற்று

**(10 புள்ளிகள்)**
**(மொத்தம் 15 புள்ளிகள்)**

7. **(அ)** மரக்கறி சேகரிப்புப் பெட்டிகளை உற்பத்தி செய்யும் கம்பனியொன்று விசேட வகையான மூலப்பொருளை இவ்வுற்பத்தியில் பயன்படுத்துகிறது. சேகரிப்புப் பெட்டியொன்றை உற்பத்தி செய்வதற்கு இம்மூலப்பொருளின் 4 கிலோகிராம் தேவைப்படுகிறது. இதன் மாதாந்த உற்பத்தியானது 150 இலிருந்து 200 பெட்டிகளாகும். இம்மூலப்பொருளின் மீள்கட்டளைத் தொகை 4 000 கிலோகிராம் ஆகும். கட்டளையொன்றிற்கான விநியோகக் காலம் 5 தொடக்கம் 7 வேலைசெய்யும் நாட்களாகும்.

**வேண்டப்படுவது:**

இம்மூலப்பொருள் தொடர்பில்:

(1) மீள் கட்டளை மட்டம்
(2) ஆகக் குறைந்த இருப்பு மட்டம்
(3) ஆகக் கூடிய இருப்பு மட்டம்
(4) சராசரி இருப்பு மட்டம்

**(05 புள்ளிகள்)**

**(ஆ)** கம்பனி ஒன்று விசேட தேவையுடைய பாடசாலை மாணவர்கள் பயன்படுத்துவதற்காக, இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப் பாகங்களைப் பொருத்தி கணினிகளை உற்பத்தி செய்வதற்குத் தீர்மானித்துள்ளது. இக்கணினி ஒன்றின் விற்பனை விலையானது ரூ. 50 000 ஆக இருக்குமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்பார்க்கப்படும் கிரயங்கள் பின்வருமாறு உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| அனுமதிப்பத்திர கட்டணம்........................................... | மாதாந்தம் | ரூ. | 50 000 |
| **சம்பளங்கள்:** | | | |
| மேற்பார்வையாளர்கள்................................................. | மாதாந்தம் | ரூ. | 80 000 |
| பொருத்தும் ஊழியர்கள்............................................... | அலகொன்றுக்கு | ரூ. | 8 000 |
| வாடகை ........................................................... | வருடாந்தம் | ரூ. | 360 000 |
| காப்புறுதி ......................................................... | மாதாந்தம் | ரூ. | 40 000 |
| மூலப்பொருட் கிரயம்.................................................. | அலகொன்றுக்கு | ரூ. | 12 000 |
| ஆலோசகர்கள் இருவருக்கான கட்டணங்கள்........................ | மாதாந்தம் | ரூ. | 100 000 |

**வேண்டப்படுவது:**

(1) மாதாந்த மொத்த நிலையான கிரயம் (ஒவ்வொரு உருப்படியையும் தனித்தனியாகக் குறிப்பிடுக.)
(2) மொத்தக் கிரயத்தை ஈடுசெய்வதற்கு மாதாந்தம் விற்பனை செய்ய வேண்டிய கணினிகளின் எண்ணிக்கை
(3) ரூ. 150 000 இலாபம் ஈட்டுவதற்கு மாதாந்தம் விற்பனை செய்ய வேண்டிய கணினிகளின் எண்ணிக்கை
(4) பொருத்தும் ஊழியர்களுக்கு அலகு அடிப்படையிலான சம்பளத்திற்குப் பதிலாக மொத்த மாதாந்த சம்பளமாக ரூ. 80 000 செலுத்தப்படின் மொத்தக் கிரயத்தை ஈடுசெய்வதற்கு மாதாந்தம் விற்பனை செய்ய வேண்டிய கணினிகளின் எண்ணிக்கை
(5) கணினிகளைப் பொருத்துவதற்கு தானியங்கி வசதிகளை ஏற்படுத்துவதன் காரணத்தினால் பொருத்தும் ஊழியருக்குரிய அலகு ஒன்றுக்கான சம்பளமானது ரூ. 3 000 ஆகக் குறைக்கப்படுமாயின் மொத்தக் கிரயத்தினை ஈடுசெய்வதற்கு மாதாந்தம் விற்பனை செய்ய வேண்டிய கணினிகளின் எண்ணிக்கை
தானியங்கி வசதிகளை ஏற்படுத்துவதனால் வருடாந்த நிலையான கிரயமானது ரூ. 180 000 இனால் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**(10 புள்ளிகள்)**
**(மொத்தம் 15 புள்ளிகள்)**

***

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk